பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 06 2026 MONDAY 12 40 PM**

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. **Slovakia** அதிபர் மற்றும் பிரதமருடன் தாம் நடத்தவுள்ள பேச்சுகள் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பிரான்ஸின் **Evian** நகரில் **G-7** உச்சிமாநாடு இன்று தொடங்குகிறது.

3. **El Nino** வெப்பத்தாக்கத்தால் நாட்டில் உணவு பற்றாக்குறை ஏற்படாது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

4. கடந்த **12** ஆண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால், நடுத்தர மக்களின் பொருளாதாரம் உயர்ந்திருப்பதாக பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

5. ஆக்லாந்து சர்வதேச நேஷனல் கப் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா **3-2** என்ற கோல்கணக்கில் அமெரிக்காவை வென்றது.

**>>>>>><<<<<<**

இரண்டுநாள் பயணமாக **Slovakia** சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று அந்நாட்டு தலைநகர் **Bratislava**-வில் அந்நாட்டு பிரதமர் திரு. **Robert Fico**-வுடன், இருதரப்பு பேச்சுகள் நடத்தவுள்ளார்.

**Slovakia** பயணம் குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக தமது பயணம் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

**Slovakia** அதிபர் மற்றும் பிரதமருடன் தாம் நடத்தும் பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**1993**ஆம் ஆண்டு **Slovakia** சுதந்திரம் பெற்ற பிறகு அந்நாட்டிற்கு பயணம் மேற்கொள்ளும் முதல் இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

வர்த்தகம், முதலீடு, தானியங்கி வாகன உற்பத்தி மற்றும் ரயில்வே துறைக்கான உற்பத்தி ஆகியவற்றில் பல்வேறு கூட்டு முயற்சிகளை மேற்கொள்ளவும் பிரதமரின் **Slovakia** பயணம் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**>>>>>><<<<<<**

பிரான்ஸின் **Evian** நகரில் **G-7** உச்சிமாநாடு இன்று தொடங்குகிறது.

கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய **7** உறுப்பு நாடுகள் இதில் கலந்து கொள்கின்றன.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை நடைபெறும் விழாவில் உரையாற்றவுள்ளார்.

இந்தியா, பிரேஸில், எகிப்து, கென்யா, தென்கொரியா உள்ளிட்ட நாடுகளுக்கு இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

**El Nino** வெப்பத் தாக்கத்தால் நாட்டில் உணவு பற்றாக்குறை ஏற்படாது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், போதிய அளவு உணவு தானியங்கள் கையிருப்பில் உள்ளதாக கூறினார்.

**El Nino** தாக்கத்தால், தென்மேற்கு பருவமழை இயல்பைவிட குறைவாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கரீப் பருவத்திற்கு தேவையான உரங்கள் போதிய அளவில் இருப்பில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

நவம்பர் மாதம் தொடங்கும் ரபி பருவத்திற்கு தேவையான உரங்களும் கையிருப்பில் உள்ளதாக திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

விமான போக்குவரத்து கட்டமைப்பை விரிவுபடுத்த தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கடந்த **12** ஆண்டுகளில் ஒரு லட்சத்து **40** ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்திருப்பதாக சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம், **Jewar**-ல் உள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்திலிருந்து பயணியர் விமான சேவையை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

லக்னோவுக்கு இன்று புறப்பட்ட முதல் விமானத்தில் விமான நிலையப் பணிகளுக்காக நிலம் வழங்கிய 172 விவசாயிகள் மற்றும் 20 பெண்கள் பயணம் செய்தனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் இந்த விமான நிலையம் உலக தரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நாட்டில் உள்ள விமான நிலையங்களின் எண்ணிக்கை தற்போது, 165ஆக அதிகரித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விமான நிலையத்தை கடந்த மார்ச் 28ஆம் தேதி பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

தற்போது, ஒரு கோடியே 20 லட்சம் பயணிகளை கையாளும் திறன் கொண்ட இந்த விமான நிலையம், எதிர்காலத்தில் 22 கோடியே 50 லட்சம் பயணிகளை கையாளும் திறன் கொண்ட சர்வதேச விமான நிலையமாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த விமான நிலையத்திலிருந்து விரைவில் பெங்களூரு, ஹைதராபாத், ஜெய்ப்பூர் உள்ளிட்ட 16 நகரங்களுக்கு விமான சேவை தொடங்கவுள்ளது.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ரா மாநிலம், சோலாப்பூர் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக இரு தலைவர்களும் தனித்தனியாக விடுத்துள்ள செய்தியில், காயமடைந்தவர்கள் விரைவில் நலம் பெற பிரார்த்தனை செய்வதாகவும் கூறியுள்ளனர்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு. கடந்த 12 ஆண்டுகளில் நடுத்தர மக்களுக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி, அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்தியிருப்பதாக பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நடுத்தர மக்களுக்கான பொருளாதார பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், மக்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்தி தரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வருமான வரி சீர்திருத்தத்தால், நடுத்தர மக்களின் வரிச்சுமை கணிசமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சரக்கு மற்றும் சேவை வரி வெளிப்படைத் தன்மையுடன் பின்பற்றப்படுவதாகவும், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களால், அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைந்திருப்பதாகவும் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் உஜ்வாலா இலவச சமையல் எரிவாயு இணைப்பு திட்டம், ஜல் ஜீவன் குடிநீர் திட்டம், தூய்மை இந்தியா இயக்கம் உள்ளிட்ட திட்டங்களால் மக்கள் பெரிதும் பயன்பெற்றிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரதமரின் வீட்டுவசதி திட்டம், ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு திட்டம் போன்றவற்றால் மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்காற்றும் நடுத்தர மக்களின் வாழ்வாதாரத்தை மத்திய அரசு உயர்த்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் அவர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

சென்னை சர்வதேச விமான நிலையத்தில், பயணிகளின் வசதிகள் மேம்பாட்டு தினம் இன்று கொண்டாடப்பட்டது.

விமான நிலைய இயக்குநர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இந்திய சுற்றுலாத்துறையின் சார்பில் மாணவர்களுக்கு விமான நிலைய சேவை குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

பயணிகளின் வசதிக்காக பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேகா 50 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

ஈரான் - அமெரிக்கா இடையேயான போர்நிறுத்த ஒப்பந்தம் வரும் 19ஆம் தேதி சுவிட்சர்லாந்தில் கையெழுத்திடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடை வரும் வெள்ளிக்கிழமை நீக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈரானின் அணுசக்தி செறிவூட்டல் நடவடிக்கைகளை கைவிடுவது குறித்த அம்சங்கள் இந்த போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளன.

இதனிடையே, அனைத்து விதமான ராணுவ நடவடிக்கைகளும் இன்றிரவு முதல் முடிவுக்கு வரும் என்று ஈரான் தேசிய பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

அமெரிக்கா - ஈரான் இடையேயான போர்நிறுத்த ஒப்பந்தத்தை வரவேற்பதாக ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதன்மூலம் அப்பகுதியில் அமைதி நிலைநாட்டப்படும் என்றும், **Hormuz** நீரிணை திறக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

**>>>>>><<<<<<**

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால், அந்தமான் நிகோபார், பீகார், ஜம்மு கஷ்மீர், ஜார்க்கண்ட் பகுதிகளில் அடுத்த **24** மணி நேரத்தில் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மஹாராஷ்ட்ரா, கர்நாடகா, தெலங்கானா, ஆந்திரா, மேற்குவங்கம், ஒடிசா, ஜார்க்கண்ட், பீகார் மற்றும் தெற்கு சத்திஷ்கடில் தென்மேற்குப் பருவமழை, அடுத்த **5** நாட்களில் தொடங்குவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

மேற்குவங்கத்தின் ஒரு சில பகுதிகள், சிக்கிம், அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா உள்ளிட்ட பகுதிகளில் வரும் **7** நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக கடும் வெப்பத்தால் பாதிக்கப்பட்டிருந்த தலைநகர் தில்லியில் இன்று காலை லேசான மழை பெய்துள்ளது.

தில்லியில் பகல்நேர வெப்பநிலை **40** டிகிரி செல்சியஸ் அளவை ஒட்டியிருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**>>>>>><<<<<<**

ஆக்லாந்த் சர்வதேச நேஷனல் கப் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா **3-2** என்ற கோல்கணக்கில் அமெரிக்காவை வென்றது.

இன்று நடைபெற்ற தொடக்க ஆட்டத்தில் இந்திய வீராங்கனை தீபிகா **2** கோலும். நவ்னீத் கவுர் ஒரு கோலும் அடித்தனர்.

**>>>>>><<<<<<**

உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்வீடன் **5-1** என்ற கோல் கணக்கில் துனீஷியாவை வென்றது.

**>>>>>><<<<<<**

துருக்கி **Antalya**-வில் நடைபெற்ற உலக வில்வித்தைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய வீரர் தீரஜ் பொம்மதேவராவுக்கு ஆந்திர ஆளுநர் திரு. அப்துல் நஸீர் பாராட்டு தெரிவித்தார்.